முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 30.06.2025

O.S. 90/2018

வா.சா. 1-கலா

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கும் எனது கணவருக்கும் கிருஸ்தவ முறைப்படி திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனது குழந்தைகள் பிறப்பால் கிருஸ்தவர்கள். 2005 ம் வருடத்தில் எனது கணவரை விட்டு பிரிந்துவிட்டேன் என்றால் சரிதான்- வா.சா.ஆ.6 ஆவணத்தில் யார் மீது நான் புகார் கொடுத்தேன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எந்த காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்பது துலங்குமா என்றால் இல்லை. வா.சா.ஆ.8 ல் யார் மீது நான் புகார் கொடுத்தேன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 11 ஆவணமானது இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. எனது கணவர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு செய்தார் என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து வாழ கணவர் அறிவிப்பு - வா.சா.ஆ.13 அனுப்பினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆனது நான் எனது வழக்கறிஞரிடம் சொல்லி வழக்கறிஞர் எனது கணவருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணத்தில் பல அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 14 ஆவணமானது 02.09.2006 ம் தேதி தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமானது 12.04.2006 ம் தேதி 1ம் பிரதிவாதி கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 14 ஆவணத்தில் எனது கணவர் மது நோயினால் மனநோயாளியாக உள்ளார் என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். உண்மையில் அவர் மனநோயாளியாக தான் இருந்தார் ஆனால் நான் அதை வெளிப்படையாக சொல்லவில்லை. வா.சா.ஆ. 6 ல் இருந்து வா.சா.ஆ.10 வரை உள்ள ஆவணங்களில் எனது கணவரின் மனநோயையை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 6 ல் இருந்து வா.சா.ஆ.10 வரை உள்ள ஆவணங்களில் உள்ள புகாரில் 1ம் பிரதிவாதி மீது சட்டப்படி மட்டுமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினேன் என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து மரங்களை எடுத்துசென்றார் என்று சொல்லியுள்ள நிலையில் எனது கணவர் நல்ல மனநிலையில்

இருந்தார் என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 முதல் வா.சா.ஆ.18 வரை உள்ள ஆவணங்களின் காலத்தின் இடையே வா.சா.ஆ.2 கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ. 20 ல் உள்ள என்னுடைய புகைப்படம் வழக்கிற்கு சம்பந்தம் இல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 20 லிருந்து வா.சா.ஆ.22 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகு பின்யோசனையின் பேரில் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. 2004 மார்ச் லிருந்து 1ம் பிரதிவாதி மருத்துவ சிகிச்சையில் இருந்தார். எனது வழக்கானது ஆவணங்களின் அடிப்படையிலும் பிராதின் அடிப்படையிலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

2, 3 ம் பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.